மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 18/22 |
| பெயர் | : | சண்முகையாபாண்டியன் |
| த/பெ. | : | பரமசிவன் தலைவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22 nd day of Januray 2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1)நான் விவசாயம் செய்து வருகிறேன்.எனக்கு சொந்த ஊர் வீரபாண்டிய புலிக்குளம்.வாதி எந்த புலஎண் தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ளார் என்று தெரியாது.ஆனால் வாதி 3 ஏக்கர் 85 செண்ட்க்காக வழக்கு தொடர்ந்துள்ளார் என்று தெரியும்.நான் படிக்கவில்லை.நான் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையினை வழக்கறிஞர் படித்து காண்பித்த பின்னர் நான் கையொப்பம் செய்தேன்.

2)நான் எதிர் வழக்குரையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் நான் தெரிந்து சொன்ன விஷயங்கள் தான்.தாவா சொத்தில் மோசடியாக ஆவணம் பதிவு செய்ததாக மாவட்ட குற்ற பிரிவில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் முன் ஜாமீன் பெற்றுள்ளேன்.அந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி நான் சொத்தை வாங்கி ஏமாற்றிவிட்டதாக துலங்கியதால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் போது என்னுடைய பெயரினை வழக்கில் இருந்து நீக்கம் செய்துவிட்டார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.கோவில்பட்டியை சேர்ந்த மாரிராஜை எனக்கு தெரியாது.

3)குழந்தைராஜா என்பவரை தெரியாது.பால்ராஜ் என்பவரை தெரியும் அவர் தான் ஆவணம் எழுதிக்கொடுத்தார்.என்னிடம் காட்டப்படும் வழக்கில் தாக்கல் செய்துள்ள பிவாசா ஆவணம் 3 ஆன அடங்கல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கியது என்றால் சரிதான்.அந்த ஆவணம் 09.11.2023 அன்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான்.அதற்கு முன்பு சாகுபடி ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.என்னிடம் காட்டப்படும் பிவாசா ஆவணம் 2 ஆன பயிர்காப்பீடு ரசீது 15.12.2020 அன்று பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.அதற்கு முன்பு

பயிர் காப்பீடு ரசீது என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) என்னிடம் காட்டப்படும் பிவாசா ஆவணம் 4 ஆன தீர்வை ரசீது 29.11.2023 தேதியிட்ட ஆவணம் என்றால் சரிதான்.அதற்கு முன்பு தீர்வை ரசீது என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பிவாசா ஆவணம் 1 ஆன பட்டா 2021 தேதியிட்ட ஆவணம் என்றால் சரிதான்.அதற்கு முன்பு தேதியிட்ட பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.தாவா சொத்தினை 2 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளதில் அவர் கிரையம் எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பாக 30 வருடங்கள் அதை அனுபவித்து வந்தார் என்று சொல்லியுள்ளதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5)மாவட்ட குற்றபிரிவில் என் மீது தாக்கல் செய்த வழக்கு என்ன ஆனது என்ற விவரம் எனக்கு தெரியாது.தாவா சொத்து ஆதியில் தர்மராஜ் நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் விசாரித்தபின்னர் அவ்வாறு தான் சொன்னார்கள்.மேற்படி தர்மராஜ் நாயக்கர்தான் வாதி சத்யநாராயணின் தகப்பனார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது.

6)தாவா சொத்து ஆதியில் தர்மராஜ் நாயக்கர் அவர்களின் பூர்வீக சொத்து பாகப்பரிவினையில் அவருக்கு கிடைத்த பாகம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.2009 ஆம் வருடத்திற்கு முன்னர் யார்யார் தாவா சொத்தினை அனுபவித்து வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது ஆனால் கிரையம் பெற்றபின்னர் சென்றபோது முருகன் கோனார் விவசாயம் செய்து கொண்டிருந்தார் , நான் கிரையம் பெற்றதாக சொன்னபின்னர் அவர் வெளியேறிவிட்டார்.

7)2 ஆம் பிரதிவாதி பால்ராஜ் மற்றும் 1 ஆம் பிரதிவாதி தர்மராஜ் ஏற்படுத்திக்கொண்ட கிரையம் ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.நான் 2 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றபின்னர் 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற

ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே நில தரகர் படித்துக்காண்பித்தார்.

8)நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு நான் தான் வழக்கறிஞரிடம் தகவல் தெரிவித்தேன்.தாவா சொத்தினை 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம்பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்துள்ளார் எனவே 2 ஆம் பிரதிவாதியிடமிருந்து நான் பெற்ற கிரையம் மோசடியானது என்றால் சரியல்ல, 2 ஆம் பிரதிவாதி பணம் கொடுத்தார் நானும் பணம் கொடுத்து தான் 2 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றேன்.

9)3 ஏக்கர் 85 செண்ட் 1975 ஆம் ஆண்டில் இருந்தே வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.1975 பாகபத்திரம் மூலம் இளவரான வாதிக்கு கிடைத்ததால் அவரது தாயார் தாவா சொத்தினை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.3 ஏக்கர் 85 செண்டில் 3 புல எண்களில் உள்ளது அதில் ஒரு புல எண் 21 செண்டாகவும் மற்றொன்று புல எண் 2 ஏக்கர் 51 செண்டாகவும் மற்றொன்று 1 ஏக்கர் 10 செண்டாகவும் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் 3 இடமாக உள்ளது தெரியும் அதன் விஸ்திரனம் தெரியாது.

10)தாவா சொத்தை பொறுத்து வாதி நாளிதழில் விளம்பரம் கொடுத்திருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் படிப்பறிவு இல்லாததால் தெரியாது.நிரூபண வாக்குமூலத்தில் வழக்கிற்கு பின்னர் பத்திரிக்கையில் விளம்பரம் கொடுத்தது தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்தபின்னர் டீ கடையில் விசாரித்து தெரிந்து கொண்டேன்.டீ கடையில் யார் சொன்து என்று குறிப்பிட்டு தெரியாது.மேற்படி விவரத்தை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11)ரேணுகா என்பவரை எனக்கு தெரியாது.தர்மராஜ் நாயக்கருக்கு வாரிசுகள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது.தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேனா என்றால் நில தரகர் எடுத்து பார்த்திருப்பார் என்று நினைக்கிறேன் என்னிடம் காண்பிக்கவில்லை.வில்லங்க சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.2 ஆம் பிரதிவாதி அவரது முன் பத்திரத்தை நான் கிரையம் பெறும்போது என்னிடம் கொடுத்தார்.அந்த முன் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.பால்ராஜ் கிரையம் பெறுவதற்கு முன்பு உள்ள முன் ஆவணத்தை எனக்கு கொடுத்தாரா என்றால் இல்லை.

12)நானும் மேற்படி முன் ஆவணம் உள்ளதா என்று 2 ஆம் பிரதிவாதியிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.இந்த வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி வருவதற்கு முன்னர் கோவில்பட்டியில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியும்.இந்த வழக்கில் வாதி தரப்பில் அவரது பவர் ஏஜெண்ட் சாட்சியம் நீதிமன்றம் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

13) இந்த தாவா சொத்து 1975 லிருந்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.1 ஆம் பிரதிவாதிக்கு எதிரிடை அனுபவம் உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.1 ஆம் பிரதிவாதி தர்மராஜ் என்பவரிடமிருந்து 2 ஆம் பிரதிவாதி பால்ராஜ்க்கு எழுதிவாங்கிய ஆவணம் மோசடியான ஆவணம் என்றாலும் அது மோசடியான ஆவணம் என்பதால் தான் மாவட்ட குற்ற பிரிவு 2 ஆம் பிரதிவாதியின் மீதும் மற்றும் குழந்தை ராஜா என்பவர் மீதும் குற்ற வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றாலும் சரியல்ல.

14)2 ஆம் பிரதிவாதியிடமிருந்து நான் எழுதி வாங்கிய கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.வாதி கோரியிருக்கும் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

<u>5,6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி தரப்பு குறுக்கு விசாரணை 5,6,7 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.